ரிதிகம பிரதேச சபை - 2022

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரிதிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து ரிதிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 90,936 ஆன கணணி இயந்திரங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | பௌதீக திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேவைக்கான கட்டண வருமானம் ரூபா 2,614,112 ஆக இருந்த போதிலும் அதனை ரூபா 2,678,239 ஆக ரூபா 64,127 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டில் சபிரிகமக் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்டுகொள்ளப்பட்ட 171 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா11,986,131 ஆக இருந்த போதிலும் அது ரூபா 15,491,998 ஆக ரூபா 3,741,935 ஆல் கடன்கொடுத்தோர் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்பட்டதனால் அதற்குரிய கடன்பட்டோரும் ரூபா 3,741,935 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் சபிரிகமக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 171 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான பணத்தை கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் பதிவேட்டிற்கு வழங்கும் போது அசசெயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு அறிக்கையை தயாரிக்கும் போது அப்பணம் மாற்றமடைந்துள்ளது. இதன் காரணமாக கடன்கொடுத்தோரும் கடன்பட்டோரும் அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இந்த வித்தியாசம் தீர்மானிப்பு குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | பிடியேகெதர உபவீதியினை அபிவிருத்தி செய்வதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 170,990 பணம் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தும் அது மீண்டும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோராக பிழையாக மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.2 கணககிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மொத்தமாக ரூபா 65,082,022 ஆன 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 821,194 வித்தியாசம் காணப்பட்டது. | சரியான பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதிகளும் பட்டோலைகளில் காட்டப்படுகின்ற மீதிகளும் சமமான பெறுமதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) விதி 33 | நிலுவையான வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரியினை செலுத்த தவறிய நபர்கள் சம்பந்தமாக விதி 33 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 10 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | ரிதிகம வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள வியாபார கட்டிடத் தொகுதியின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது ஒரே தடவையில் செலுத்தும் பணம் (Key money) பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இந்த ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை 04 ஆண்டுகளில் செலுத்துவதற்கு சலுகைக் | கடைகளில் 07 கடைகள் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 3,863,000 பணத்தில் இன்றுவரை ரூபா 735,000 பணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மிகுதி ரூபா 3,128,000 பணம் மேலும் தெரியப்படுத்தி அறவீடு செய்வதற்கு | சபையின் வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காலம் வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக 2017, 2018, 2019 2020 ஆகிய ஆண்டுகளில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தும் 2022 நவம்பர் 18 ஆந் திகதி வரை 07 கடைகளிலிருந்து ரூபா 3,863,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 21,460,953 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 13,117,239 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 |
| (i) | வீத வரியும் வரியும் | 4,753 | 4,910 | 5,304 | 3,170 | 4,752 | 4,154 | 2,781 | 3,564 |
| (ii) | வாடகை | 6,415 | 5,427 | 5,624 | 918 | 8,360 | 3,168 | 2,389 | 1,115 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,092 | 604 | 604 | - | 1,090 | 512 | 512 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 20,500 | 20,500 | 17,930 | 21,200 | 27,500 | 27 ,500 | 1,693 | 26,405 |
| மொத்தம் | | 32,760 | 31,441 | 29,462 | 25,288 | 41,702 | 35,334 | 7,375 | 31,084 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் 1083 வீதவரி அலகுகளில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,564,335 நிலுவைகளில் ரூபா 2,108,130 பணமும், ஆண்டின் பட்டியலிடப்பட்ட ரூபா 4,756,528பணத்தில் ரூபா 1,061,758 பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை சேகரிக்கும் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆதனங்களைத் தடைசெய்யும் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் மிகுதியான வீதவரி வருமானத்தை துரிதமாக அறவீடு செய்யும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தையும் பட்டியலிடப்பட்ட வருமானத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 269 வீதவரி அலகுகளிலிருந்து 05 ஆண்டுகளை மிகைத்து அறவிட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 939,169 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 269 வீதவரி அலகுகளிலிருந்து 05 ஆண்டுகளை மிகைத்து அறவிட வேண்டிய நிலுவை மீதியில் தற்பொழுது ரூபா 91,550 பணம் அறவிடக்கூடியதாக இருந்தது எனவும் மிகுதி நிலுவைப் பணம் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் துரிதமாக அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 206,847 ஏக்கர் வரிப் பணம் அறவிடப்பட்டதுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய ரூபா 153,438 நிலுவை மீதியானது அந்த மீதியில் உளளடக்கப்பட்டிருந்தது. | நிலுவைப் பணத்தை மீளாய்வின் மூலம உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) வாடகை**

| | | |
|---|---|---|
| சபையில் பதிவுசெய்த 366 முச்சக்கர வண்டிகளிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 256,200 கட்டணத்தை அறவீட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது 102 முச்சக்கர வண்டிகள் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொண்டுள்ளதுடன் மிகுதி முச்சக்கர வண்டிகளுக்காகவும் துரிதமாக அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபையின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த ரூபா 6,600,000 பாதீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 22 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ரூபா 6,600,000 பாதீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 22 நிர்மாண வேலைகள் தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் பொதுச் சபை மற்றும் குழு தீர்மானம் எடுத்ததன் பின்னர் இச்செயற்திட்டங்களை திருத்தம் செய்து ஏனைய செயற்திட்டங்களை மேற்கொண்ட அதிகாரப் பிரதேசத்திலுள்ள மக்களின் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் கிராமிய மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கவிசிகமுவ மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,888,346 பணத்திற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு ரூபா 619,480 தொகையான வேலைப் பகுதி மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டு தற்பொழுது செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. | 2023/04/20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சுநிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி இடைநடுவில் வேலை நிறுத்தப்பட்டுள்ள நிர்மாண வேலை தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2023/04/21 ஆந் திகதிய அமைச்சு நிதி ஏற்பாட்டினைப் | ஒப்பந்தக்காரர் நிர்மாணத்தை அமுல்ப்படுத்தாமை சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் இச்செயற்திட்டத்தினையும் உள்ளடக்கி தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்ட உடன் இதன் மிகுதி வேலைகள் பூர்த்திசெய்யப்படும். | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தெலம்புகல்லவிலுள்ள 03 இறைச்சிக் கடைகளுக்கு நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நீதிமன்ற அறிவித்தலின் அடிப்படையில் ரூபா 221,318 நிலுவைப் பணத்தையும் வழக்கு கட்டணமாக ரூபா 174,000 பணமும் செலவு செய்யப்பட்டுள்ளதனால் அப்பணத்தையும் எதிராளியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் உரிய நிலுவைப் பணத்தையும் கட்டணத்தையும் செலுத்துவது சம்பந்தமாக குத்தகைதாரர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது அவர்கள் தவணை அடிப்படையில் அப்பணத்தை செலுத்துவதற்கு எழுத்துமூல இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளனர். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கரந்தகொல்ல அணைவரை வீதிக்கு போக்குவரத்து அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டு சபிரிகமச் செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது வெற்றியளிக்காது பூர்த்திசெய்தமையின் காரணமாக உள்ளூராட்சி திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்தல் நிராகரிக்கப்பட்டது. அந்த நிராகரித்த செயற்திட்டத்திற்காக ரூபா 1,322,046 தொகை கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோராக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கௌரவ பெருந்தெருக்கள் அமைச்சர் மற்றும் மாவட்ட செயலாளருக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் எழுத்துமூலம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக 2021/10/08 ஆந் திகதி எழுத்துமூல தெளிவுபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இன்றுவரை அது தொடர்பான பதில் கிடைத்திருக்காததனால் நிதிக்கொள்கை மற்றும் தீர்மானம் எடுக்கும் குழுவிற்கு அனுப்பி கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு வருகையில் அச்செயற்திட்டத்திற்காக சபையின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |